தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – பங்குனி 22

2010 ஏப்ரல் 5, திங்கட்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு."

ஒரு செயலைத் தேர்ந்தெடுத்தலும், அதனை நிறைவேற்றிட வழிவகைகளை ஆராய்ந்து ஈடுபடுதலும், முடிவு எதுவாயினும் அதனை உறுதிபடச் சொல்லும் ஆற்றல் படைத்திருத்தலும் அமைச்சருக்குரிய சிறப்பாகும்.

(பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் திரு. பி.என்.பி இன்பசேகரன் அவைக்குள் நுழைந்தபோது, உறுப்பினர்கள் மேசையைத் தட்டி வரவேற்றனர்.)

(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கறுப்பு உடை அணிந்து வந்திருந்தனர்.)

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

[2010 ஏப்ரல் 5

1—

குடிநீர் வசதி

***32858—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் பேரூராட்சியில் 2-வது காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், காங்கேயம் பேரூராட்சிக்கு ரூ.47 கோடியே 74 இலட்சம் மதிப்பீட்டில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டப் பேரவையிலே முதல் கேள்வியைக் கேட்கின்ற வாய்ப்பினை அளித்த தங்களுக்கும், நல்ல பதிலைத் தந்திருக்கிற தமிழக துணை முதலமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையிலே அருமையான திட்டங்களை இந்த 4 ஆண்டுகளிலே செயல்படுத்தி 5-வது ஆண்டிலே அருமையான புதிய சட்டமன்ற வளாகத்திலே வசதி வாய்ப்புகளோடு, நல்ல இட வசதியோடு அமரச் செய்திருக்கிற தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வரலாற்றுச் சாதனைகளிலே முத்தாய்ப்பாய் இருக்கிற சாதனை சட்டமன்ற வரலாற்றுக் கட்டடம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வரலாற்றில் இந்தச் சிறியவனுக்கும் முதல் கேள்வியைக் கேட்கிற வாய்ப்பினை அளித்த தங்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்து, இந்தத் திட்டம் எப்போது தொடங்கப்படும், எவ்வளவு காலத்தில் முடிக்கப்படும்? இதன்மூலமாக காங்கேயம் நகரத்திற்கு, வெள்ளக்கோவில் நகராட்சிக்கு எத்தனை இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி 24-3-2010 அன்று பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும். இந்தத் திட்டத்திற்கான பணிக்காலம் 18 மாதங்கள் என நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டவுடன், நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு, வெள்ளக்கோவில் நகராட்சியில் உள்ள மக்களுக்கு 135 லிட்டர் வீதமும், காங்கேயம் பேரூராட்சியில் இருக்கக்கூடிய மக்களுக்கு 70 லிட்டர் வீதமும், ஊரகக் குடியிருப்புகளில் இருக்கக்கூடிய மக்களுக்கு 40 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் பேரூராட்சியாக இருந்து, கடந்த ஆண்டு நகராட்சியாக அறிவிக்கப்பட்டு அது அரசாணைக்காகக் காத்திருக்கிறது. நகராட்சியாக்குகிறபோது, நகராட்சிக்குரிய 135 லிட்டர் தண்ணீர் கொடுக்கிற அளவிற்கு இந்தத் திட்டத்திலே இடம் பெற்றிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு இந்தத் திட்டத்திற்கான நிதியுதவியை பேரூராட்சியால் அளிக்க முடியாத சிரமமான சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே, அரசினுடைய பிற நிதி உதவியை, கடன் உதவியைத் தருவதற்கு துணை முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, நகராட்சியாக அறிவிக்கப்பட்ட காரணத்தாலே, நகராட்சிக்குரிய தண்ணீரை வழங்குவதற்கான முயற்சியை விரைவாக செய்திட வேண்டுமென்ற வேண்டுகோளோடு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 2007 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டபோது, காங்கேயம் பேரூராட்சிக்கு மட்டும் அறிவிக்கப்பட்டு, அப்போது திட்ட மதிப்பீடு ரூ.12 கோடியே

13 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு வெள்ளக்கோவில் நகராட்சி மற்றும் வழியோரக் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கவேண்டும் என்ற ஒரு கோரிக்கை அந்தப் பகுதியில் இருந்து வந்த காரணத்தால் இந்தத் திட்டத்தை மறு ஆய்வு செய்து அரசு உத்தரவிட்டு அந்த அடிப்படையிலே காங்கேயம் பேரூராட்சி, வெள்ளக்கோவில் நகராட்சி மற்றும் வழியோர 174 ஊரகக் குடியிருப்புகளுக்கும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முடிவு செய்து, அந்த வகையிலே ரூ.47 கோடியே 74 இலட்சம் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வகையிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்து வைத்த அந்தக் கோரிக்கையையும் இந்த அரசு நிச்சயமாகப் பரிசிலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2—

உழவர் சந்தை

***91278—திரு. ஓ. சுப்பிரமணியம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, புன்செய் புளியம்பட்டி நகராட்சியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பவானிசாகர் தொகுதி, புன்செய் புளியம்பட்டி நகராட்சியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS